செய்தி வெளியீடு எண் : 763 நாள்: 13.05.2022

# செய்தி வெளியீடு

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பாக சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் பணிபுரியும் நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சி இன்று (13.05.2022) சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ.சண்முக சுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள், பொது விநியோகத் திட்டத்தின் சிறப்புகள் குறித்தும், நியாய விலைக் கடை பணியாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள். மேலும், இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டும் தான் கூட்டுறவுத் துறை மூலம் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது என்றும், ஏழை எளிய மக்களுக்கு பேரிடர் காலத்தில் எவ்வித தொய்வும் இன்றி அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். மேலும், போரிடர் காலத்தில் நியாய விலைக் கடை பணியாளர்கள் பொது விநியோகத் திட்டம் மூலம் சிறப்பான சமுதாய பணிகள் ஆற்றியுள்ளனர் என்றும், பேரிடர் காலத்தில் அரசு வழங்கிய கொரோனா நிவாரண உதவித் தொகை மற்றும் நிவாரணப் பொருள் உதவிகள் 100% மக்களுக்கு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்கள்.

மேலும், தரமற்ற அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகளில் வழங்க வேண்டாம் என்றும், விற்பனையாளர்களுக்கு பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளை நேரடியாக 9884000845 எண்ணிற்கு கட்செவி அஞ்சல் மூலம் தொடர்புறுத்தலாம் என்றும் தெரிவித்தார்கள். நியாய விலைக் கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி பயிற்சி முகாமில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு பொது விநியோகத் திட்டக் கட்டமைப்பு, பொது விநியோகத்

திட்ட நோக்கம் ஆகியவை குறித்து எடுத்துரைத்து, பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்த கேட்டுக் கொண்டார்கள்.

மேற்படி பயிற்சி முகாமில், கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கினார்கள். இப்பயிற்சி முகாமில் இணைப்பதிவாளர் (பொவிதி) வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்கள் மற்றும் உணவு வழங்கல் துறை துணை ஆணையர் ஆகியோர் பொது விநியோகத் திட்டம் குறித்து சிறப்பு பயிற்சி வழங்கினார்கள்.

இப்பயிற்சியில் இணைப் பதிவாளர் (பொவிதி)–1 அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர், துணைப்பதிவாளர் (பொவிதி) பூங்கா நகர்–1, துணைப்பதிவாளர் (பொவிதி) பிரதம பண்டக சாலைகள் வடக்கு மற்றும் தெற்கு , துணைப்பதிவாளர் (பொவிதி) புறநகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in